# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே



சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 08.08.2023 supeedsam.com supeedsam@gmail.com


## சர்வக்கட்சி மாநாட்டை புறக்கணிக்கிறது இலங்கை தமிழ் காங்கிரஸ்

# கடும் அழுத்தம் கொடுக்க தயாராகும் கூட்டமைப்பு



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வக்கட்சி மாநாட்டை அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் புறக்கணிக்க உள்ளதாக அக்கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமது கட்சி கடந்த சவர்கட்சிக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்பதுடன், அடுத்தக் கூட்டத்திலும் கலந்துகொள்ளப் போவதில்லையென கூறினார்.

13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது சம்பந்தமாக இரண்டு சுற்று பேச்சுவார்த்தைகள் முடிவடைந்துள்ள நிலையில் ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து மூன்றாவது சுற்று பேச்சுவார்த்தைக்காக எமக்கு மீண்டும் அழைப்பு வந்துள்ளது. இதனை தமிழ்

02 ஆம் பக்கத்தில்...

## திருகோணமலையில் விமான விபத்து: இருவர் உயிரிழப்பு



விமானப் படைக்குச் சொந்தமான பயிற்சி விமானம் ஒன்று திருகோணமலை விமானப் படைத் தளத்தின் சீன குடா பகுதியில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் இரண்டு விமானப்

02 ஆம் பக்கத்தில்...

## நாட்டில் நல்லிணக்கம் ஏற்படுவதற்கு 13 ஆவது திருத்தச்சட்டம் அவசியம்

13 ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டால், நாட்டில் நல்லிணக்கம் ஸ்தீரப்படுத்தப்படும் என்று அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த அவர், 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பான பிழையான கண்னோட்டத்திலிருந்து பெரும்பான்மையின மக்களும் வெளியே வரவேண்டும்

02 ஆம் பக்கத்தில்...



## ரணிலும் மகிந்தவும் ஒரே அணியினர் நிறத்தில் மாத்திரமே வித்தியாசம்



மாற்றத்தை எதிர்ப்பார்த்து ரணிலுக்கு பதிலாக மகிந்தவையும் மகிந்தவுக்கு மாற்றாக ரணிலையும் அதிகாரத்திற்கு கொண்டு வருவதால் எந்த பயனுமில்லை எனவும் இவர்கள் இரண்டு தரப்பினர் அல்ல ஒரே அணியினர் எனவும் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் ஜா-எல பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## பெண்ணுக்கு ஆணுறுப்பை காட்டிய சமுர்த்தி உத்தியோகத்தர் சிக்கினார்

(பாறுக் ஷிஹான்)

குடும்ப பெண் ஒருவருக்கு ஆணுறுப்பை வட்அப்ஸ் செயலியின் ஊடாக காட்டி தையல் இயந்திரம் உட்பட சலுகைகள் பல தருவதாக கூறி பாலியல் தொந்தரவு மேற்கொண்ட சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரை சாய்ந்தமருது பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ்

02 ஆம் பக்கத்தில்...

## கட்சிப் பதவியிலிருந்து சிவாஜிலிங்கம் நீக்கப்பட்டாரா..?

தமிழ்த் தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் நீக்கப்பட்டுள்ளதாக வெளியான செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் சிறிகாந்தா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சியின் கூட்டத்தில் தாம் பல்வேறு விடயங்கள்

02 ஆம் பக்கத்தில்...



## வறட்சி காரணமாக 12 மாவட்டங்களில் குடிநீர் பிரச்சினை



நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக 12 மாவட்டங்களில் குடிநீர் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக இதுவரை 48 ஆயிரம் குடும்பங்கள்

02 ஆம் பக்கத்தில்...


"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt

CEO



Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302

Fachmann für versicherung & vorsorge

Hauptstrasse 54

6015 Luzern

Switzerland

079 8000 100

arulnages@yahoo.com

finma 34598

25605: cicero



MATHE BILDUNGSZENTRUM

கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை

பள்ளித் தலமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN

076 431 83 79

mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல

Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung

BMS, HMS, FMS, Gymi Probe

அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்

Oerlikon, Uster, Schaffhausen

## மக்களை ஏமாற்றும் குறுகிய நோக்கத்துடன்
# 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் முன்வைக்கப்படவுள்ளது

**(சில்மியா யூசுப்)**

13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பான அரசாங்கத்தின் பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், மக்களை ஏமாற்றும் குறுகிய நோக்கத்துடன் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் முன்வைக்கப்படவுள்ள நிலையில், ஜனாதிபதி புதன்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்ற உள்ளார் என பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

நேற்று (07) கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்க அமைச்சர்களின் இழுபறியால் 50,000 விவசாயக் குடும்பங்கள் அனாதைகளாக மாறியுள்ளதாகவும், விவசாய மக்களுக்கு நீர் வழங்கப்பட வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு எனவும் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

எல்லாவற்றையும் இயற்கைக்கு விட்டால் அரசாங்கத்தால் எந்த பயனும் இல்லை என்றும், மக்களின் பிரச்சனைகளை திசை திருப்பும் தந்திரமாக 13வது அரசியலமைப்பு திருத்தத்தை கொண்டு வந்து மின்கட்டணத்தை உயர்த்தி கொடுத்த உறுதிமொழியை தற்போது மின்துறை அமைச்சர் அப்பட்டமாக மீறுவதாக தெரிவித்தார். . .



ஜனாதிபதிக்கு நேரடியாக வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளை தாம் புறக்கணிப்பதாகத் தெரிவித்த பேராசிரியர், உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின் விளைவுகளை சாதாரண மக்களே அனுபவிக்க நேரிடும் என சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியின் சில அறிக்கைகள் ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தலாக இருப்பதாகவும், 13வது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் அரசியல் கட்சிகளிடம் இருந்து யோசனைகளை பெற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி அலுவலகம் கடிதம் ஒன்றை சமர்ப்பித்துள்ளதாகவும், இது கண்துடைப்பாகும் என்றும் பீரிஸ் தெரிவித்தார்.

மக்கள் பிரதிநிதிகள் இன்றி, அதிகாரத்தை பரவலாக்குவது யார் என்ற கேள்வி எழுவதாக தெரிவித்த பீரிஸ், அதனை மக்கள் பிரதிநிதிகள் கொண்ட மாகாணசபைகளே செய்ய வேண்டுமென சுட்டிக்காட்டினார்.

எவ்வாறான தந்திரங்களை செய்தாலும் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முடியாது எனவும், இன்னும் ஒரு வருடத்திற்குள் ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.



# கோக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வர வருடாந்த உற்சவநிகழ்வுகள்

வரலாற்று சிறப்பு மிக்க கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வர் ஆலயத்தின்.2023வருடாந்த உற்சவத்தின் நிகழ்வுகள்.18.08.2023 அன்று இரவு வெள்ளிக்கிழமை கிராம சாந்தியும் மறு நாள் அதிகாலை 19.08.2023 சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆலயத்திருவிழாக்கள் 5 நாட்கள் நடைபெற்று குடித்திருவிழாக்கள் வரிசை அடிப்படையில்.

| | |
|---|---|
| 24.08.2023 | பொன்னாச்சிகுடி பெருமக்களின் திருவிழா |
| 25.08.2023 | திகடன்குடி பெருமக்களின் திருவிழா |
| 26.08.2023 | சஷ்டிகுடி பெருமக்களின் திருவிழா |
| 27.08.2023 | பெத்தான்குடி பெருமக்களின் திருவிழா |
| 28.08.2023 | கோப்பிகுடி பெருமக்களின் திருவிழா |
| 29.08.2023 | கச்சிலாகுடி பெருமக்களின் திருவிழா |
| 30.08.2023 | பணிக்கனாகுடி பெருமக்களின் திருவிழா |
| 31.08.2023 | படையாட்சிகுடி பெருமக்களின் திருவிழா |
| 01.09.2023 | கலிங்ககுடி பெருமக்களின் திருவிழா |
| 02.09.2023 | உலகிப்போடிகுடி பெருமக்களின் திருவிழா |

03.09.2023 பிற்பகல் தேரோட்டம் அன்று இரவு முனைக்காடு வீரபத்திரசுவாமி ஆலய முன்றலில் திருவேட்டை , 04.09.2023 அதிகாலை தீர்த்த உற்சவத்துடன் நிறைவுறும்

# மின்சார கட்டணங்களில் திருத்தம் செய்யப்பட மாட்டாது

**(சில்மியா யூசுப்)**

மின் கட்டண உயர்வு தொடர்பான ஊடகச் செய்திகளை மறுத்துள்ள மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, மின்சாரத்தின் கட்டணங்களில் திருத்தம் செய்யப்பட மாட்டாது என உறுதியளித்துள்ளார்.

ஒவ்வொரு வருடமும் ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை மின்சார விலையை மாற்றியமைப்பது அரசாங்கத்தின் கொள்கை முடிவு என அமைச்சர் விஜேசேகர ட்விட்டரில் தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபை ஆண்டு முழுவதும் தடையற்ற மின்சார விநியோகத்தை திட்டமிடப்பட்ட மின் வெட்டுக்கள் இன்றி திட்டமிட்டுள்ளதாகவும், தற்போது கிடைக்கக்கூடிய மின் உற்பத்தி நிலையங்களின் முழு கொள்ளளவும் மின் உற்பத்திக்காக பயன்படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## வறட்சி காரணமாக 12 மாவட்டங்களில் குடிநீர்...

பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

குறித்த 12 மாவட்டங்களில் சுமார் 40 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு பவுசர் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருவதுடன், 156,000 பேருக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அது மாத்திரமன்றி கால்நடைகளுக்கும் குடிநீர் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் குடிநீருக்காக 2 மில்லியனுக்கும் அதிகளவான தொகையினை அரசாங்கம் செலவிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், குறித்த 12 மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கு குடிநீர் விநியோகத்தினை மேற்கொள்வதற்கான விசேட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இதனிடையே, அண்மைக்கால வரலாற்றில் உடவலவ நீர்த்தேக்கத்தில் மிகக்குறைந்த நீர்மட்டம் பதிவாகியுள்ளதாக மகாவலி அதிகார சபை தெரிவித்துள்ளது. நேற்றுக் காலை நிலவரப்படி, உடவலவ நீர்த்தேக்கத்தின் வினைத்திறன் நீர் மட்டம் மொத்த நீர் கொள்ளளவில் 0.45 வீதமாக காணப்பட்டுள்ளது. மகாவலி வளவ பிரதேசத்தில் 20 வருடங்களின் பின்னர் மிக மோசமான வரட்சி ஏற்பட்டுள்ள நிலையில், உடவலவ நீர்த்தேக்கத்தில் நீர் வற்றிப்போவதால் ஏற்பட்டுள்ள நெருக்கடி மேலும் தீவிரமடைந்துள்ளது.

அத்துடன், உடவலவ நீர்த்தேக்கத்தின் வினைத்திறன்மிக்க நீர்மட்டம் வீழ்ச்சியடைந்துள்ளதுடன் அண்மைக்கால வரலாற்றில் மிகக்குறைந்த மட்டம் பதிவாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை, நீர் வற்றியுள்ள உடவலவ நீர்த்தேக்கத்தை பார்வையிட பெருமளவான மக்கள் வருகைத் தருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் யானைகள் நடமாட்டம் அதிகமாக காணப்படுவதால் மக்கள் அப்பகுதிக்குச் செல்வது ஆபத்தானது என நீர்த்தேக்கத்திற்கு பொறுப்பான அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## கட்சிப் பதவியிலிருந்து சிவாஜிலிங்கம் ...

தொடர்பில் ஆராய்ந்தோம். சிவாஜிலிங்கம் தனியாக இந்தியாவுக்கு கடிதம் எழுதியது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

ஆனால் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து சிவாஜிலிங்கம் நீக்கப்படுகிறார் என கட்சிக் கூட்டத்தில் முடிவுகள் எடுக்கப்பட்டதாக ஊடகங்களில் வெளியான செய்திகள் உண்மைக்கு புறம்பானவை.

சிவாஜிலிங்கம் தொடர்ந்தும் எமது கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் நீடிக்கின்றார் என சிறீகாந்தா தெரிவித்தார்.

13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த கோரி தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இந்திய பிரதமருக்கு கடிதம் அனுப்பியிருந்தனர்.

அந்த சமயத்தில் எம்.கே.சிவாஜிலிங்கம், அதற்கு முரணான- முற்றிலும் நேர்மாறாக தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வாக தனிநாட்டுக்கான பொதுசன வாக்கெடுப்பை நடாத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

இந்நிலையில் கட்சியின் செயலாளர் பொறுப்பிலிருந்து எம்.கே.சிவாஜிலிங்கத்தை விலகுமாறு கட்சி தலைமையால் கோரப்பட்டிருந்தது. அவர் பதவிவிலகாததையடுத்து, கட்சியை விட்டு நீக்கப்படுவதாக நேற்று நடந்த கட்சியின் தலைமைக்குழு கூட்டத்தில் அறிவிக்கப்பட்டதாக முன்னர் செய்திகள் வெளியானமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டில் நல்லிணக்கம் ஏற்படுவதற்கு ...

என்றும் கேட்டுக் கொண்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், தெற்கு மக்கள் மற்றும் அரசியல்வாதிகள் வடக்கு கிழக்குத் தொடர்பில் கொண்டிருக்கின்ற பார்வைகளில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

குறிப்பாக வடக்கு கிழக்கினைப் பொறுத்தளவில் பிரிவினைவாத மற்றும் முற்போக்குவாத கட்சிகள் காணப்படுகின்றன.

எனினும் தெற்கு மக்கள் குறிப்பாக பெரும்பான்மையின மக்கள் 13 ஆவது திருத்தச்சட்டம் என்பது நாட்டைப் பிளவுபடுத்தும் என்ற சிந்தனையை முதலில் அகற்ற வேண்டும்.

இந்த 13 ஆவது திருத்தச் சட்டத்தினைப் பொறுத்தவரையில் தற்போது ஜனாதிபதிக்கு மிகவும் சவாலான விடயமாகக் காணப்படுவது காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் என்பனவாகும்.

எனவே இந்த விடயத்தில் அனைவருமே ஒரு விட்டுக் கொடுப்புடன் நடந்து கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது.

நம்பிக்கையீனங்கள் குறித்துப் பேசிக் கொண்டிருக்காமல் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும்.

ராஜீவ் - ஜே. ஆர் ஜயவர்தன ஆகியோர் அன்று 13 ஆவது திருத்த சட்டமூலத்தை கொண்டுவந்தபோது அன்றைய அமைச்சரவையில் ஒரு அமைச்சராக அங்கம் வகித்த தற்போதைய ஜனாதிபதி, இந்த அதிகாரப் பகிர்வுப் பிரச்சினைக்கு நிரந்தமான தீர்வை முன்வைப்பார் என்று எனக்கு நம்பிகை இருக்கின்றது.

அதிகாரப் பகிர்வின் மூலம் நாடு துண்டாடப்படும் என்று தெற்கில் உள்ள அரசியல் தலைவர்கள் கருத்துக்களை வெளியிடும் அதே நேரம், முதலில் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறும், எமக்கு முழுமையான அதிகாரப் பகிர்வு மாத்திரமே வேண்டும் என்றும் வடக்கு, கிழக்கு அரசியல் தலைவர்கள் கருத்துக்களை முன்வைக்கின்றனர். இவை இரண்டுமே இரு தீவிர நிலைப்பாட்டை வெளிப்படுத்துகிறது

எனவே ஜனாதிபதியின் முடிவுகளுக்கு விட்டுக் கொடுப்புக்களுடன் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## திருகோணமலையில் விமான விபத்து; இருவர் உயிரிழப்பு

படை வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

நேற்று (ஆகஸ்ட் 7, 2023) காலை 11:27 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்தது.

இலங்கை விமானப்படைக்கு சொந்தமான சீன குடா தளத்தில் அமைந்துள்ள பயிற்சிக் கல்லூரியில் அமைந்துள்ள இலக்கம் 01 விமானப் பயிற்சிப் பிரிவின் விமானிகளுக்குப் பயிற்சியளிக்கப் பயன்படுத்தப்படும் ககூ 6 ரக விமானமே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியுள்ளது. விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ச விபத்து குறித்து விசாரணை நடத்த விசேட விசாரணைக் குழுவொன்றை நியமித்துள்ளதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்தது.

## பெண்ணுக்கு ஆணுறுப்பை காட்டிய சமுர்த்தி உத்தியோகத்தர் சிக்கினார்

பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதி ஒன்றில் வசிக்கின்ற 2 பிள்ளைகளின் தாயான குடும்ப பெண்ணிடம் பல சலுகைகளை பெற்று தருவதாக ஆசை வார்த்தைகள் கூறியுள்ளார்.

தனது ஆணுறுப்பை புகைப்படம் எடுத்து குடும்ப பெண்ணின் வட்அப்ஸ் செயலியின் ஊடாக குடும்ப பெண்ணின் கைத்தொலைபேசிக்கு தொடர்ச்சியாக அனுப்பி பாலியல் சேட்டை செய்து வந்த சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் தொடர்பான முறைப்பாடு ஒன்று திங்கட்கிழமை (07) கிடைக்கப்பெற்றிருந்தது.

இதற்கமைய சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பல்வேறு குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி எம்.ஐயூப் தலைமையிலான பொலிஸார் விசாரணை மேற்கொண்டு சந்தேக நபரான 41 வயது மதிக்கத்தக்க சாய்ந்தமருது பிரதேச செயலக சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரை கைது செய்துள்ளனர்.

மேலும் சந்தேக நபரான சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பல்வேறு திருமணங்கள் மேற்கொண்டுள்ளதுடன் இவ்வாறு பல்வேறு கணவன் அற்ற பெண்கள் மற்றும் தனிமையில் உள்ள பெண்களை நாடி தனது இச்சைக்காக ஆசை வார்த்தைகளை கூறி பாலியல் இலஞ்சம் பெற்றுள்ளமை பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கைதான சந்தேக நபரை இன்று (08) கல்முனை நீதிவான் நீதிமன்றில் சட்ட நடவடிக்கைக்காக ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

## ரணிலும் மகிந்தவும் ஒரே அணியினர் நிறத்தில் மாத்திரமே வித்தியாசம்

பொது மக்களின் பணத்தை கொள்ளையிடுவதற்கு பதிலாக அதனை பாதுகாக்கும் அரசியல் அவசியம். அந்த மாற்றத்தை தேசிய மக்கள் சக்தியே ஏற்படுத்தும்.

பல தசாப்தங்களாக எமது நாட்டு மக்கள் மாற்றத்தை எதிர்ப்பார்த்து அரசாங்கங்களை ஆட்சிக்கு கொண்டு வந்தனர். அரசாங்கங்களை கவிழ்த்தனர். திரும்பி பார்த்தால் எந்த மாற்றங்களும் ஏற்படவில்லை.

உண்மையான மாற்றமே நாட்டுக்கு தேவைப்படுகிறது. நாட்டு மக்கள் தலைவர்களையும் அரசாங்கங்களையும் மாற்றிய போதிலும் அரசியல் கலாசாரமோ, பொருளாதார நடைமுறைகளோ, கொள்ளைகளோ மாற்றமடையவில்லை.

எமது நாட்டுக்கு அரசியல் கலாசாரமும், பொருளாதார கொள்கையும் சிறந்த சமூக மாற்றமும் அவசியம்.

பல தசாப்தங்களாக மக்கள் எதிர்ப்பார்க்கும் அந்த மாற்றத்தை செய்ய தேசிய மக்கள் சக்தி தயாராக இருக்கின்றது.

நாட்டை மாறி, மாறி ஆட்சி செய்தவர்கள் வர்ணங்களில் மாத்திரமே வித்தியாசமானவர்கள். அரசியலில் இவர்கள் இரண்டு அணிகள் அல்ல. ஒரே அணியினர். கொள்கைகளிலும் செயற்பாடுகளில் ஒரே மாதிரியானவர்கள்.

விற்பனை செய்யப்பட்ட ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை திரும்ப பெறவும், ஈஸ்டர் தாக்குதலுக்கு தண்டனை வழங்கவும் மத்திய வங்கி திருடன் ரணில் விக்ரமசிங்கவுக்கு தண்டனை வழங்கவும் கோட்டாபயவை ஆட்சிக்கு கொண்டு வந்தனர்.

எனினும் கோட்டபாய வீட்டுக்கு சென்ற பின்னர் அதே வாக்குகளில் ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தனர். எப்படி இது நடக்கலாம்,

அரசியலில் இவர்கள் இரண்டு தரப்பினரும் தனித்தனி அணியல்ல, இரண்டு தரப்பினரும் ஒரே அணி என்பதையே இது காட்டுகிறது.

நிமல் சிறிபால டி சில்வா 1994 ஆம் ஆண்டில் சந்திரிகா அரசாங்கத்திலும் 2005 ஆம் ஆண்டு மகிந்த அரசாங்கத்திலும் 2015 ஆம் ஆண்டில் ரணில் அரசாங்கத்திலும் 2019 ஆம் ஆண்டு கோட்டாபய அரசாங்கத்திலும் தற்போது 2023 ஆம் ஆண்டில் ரணில் அரசாங்கத்திலும் அமைச்சர்.

எந்த மாற்றமும் இல்லை. மகிந்த அமரவீர சந்திரிகா முதல் தற்போதைய ரணில் விக்ரமசிங்க வரையான அனைத்து அரசாங்கங்களிலும் அமைச்சர்.

மக்கள் மாற்றங்களை செய்கின்றனர், எனினும் அவர்கள் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்கின்றனர். எனினும் மக்கள் தற்போது உண்மையான மாற்றத்தை எதிர்பார்த்துள்ளனர்.

அந்த மாற்றத்தை தேசிய மக்கள் சக்தியால் மாத்திரமே ஏற்படுத்த முடியும் எனவும் அனுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

## சர்வக்கட்சி மாநாட்டை புறக்கணிக்கிறது

மக்களின் அரசியல் தீர்வு சம்மந்தமான பேச்சுவார்த்தையென சர்வதேச மட்டத்தில் காட்டிக்கொள்ளும் அரசாங்கம், தமிழ் மக்களின் இனப்பிரச்சனைக்கு எந்தவித தொடர்பும் இல்லாத ஒற்றையாட்சிக்குள் இருக்கக் கூடிய 13ஆவது திருத்தம் தொடர்பாக பேச அழைத்துள்ளனர்.

இது மீண்டும் மீண்டும் ஈழத் தமிழர்களை முட்டாள்களாக்கும் வேலையாகும். ஈழத் தமிழர்களை ரணில் விக்ரமசிங்க மதிக்கத் தயாரில்லை அல்லது கணக்கெடுக்கத் தயாரில்லை என்பதையே இந்தச் செயல்பாடுகள் காட்டுகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம்முறை ஜனாதிபதிக்கு அழுத்தம் திருத்தமான பதிலொன்றை அளிக்க தயாராகி வருவதாக அக்கட்சியின் வட்டாரங்களில் அறிய முடிந்தது.

13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்பதுடன், மாகாண சபைத் தேர்தலையும் உடனடியாக நடத்த வேண்டும் என்பதே தமிழ்க் கட்சிகள் சர்வக்கட்சி கூட்டத்தில் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன.

13ஆவது திருத்தச்சட்டம் தமிழ் மக்களுக்கான முழுமையான தீர்வாக இல்லாவிட்டாலும் அதனை அமுல்படுத்த ஜனாதிபதி எடுத்துவரும் முயற்சிகளை தமிழ் கட்சிகள் வரவேற்றுள்ளன.

ஆனால், பேச்சுவார்த்தை மட்டத்திலேயே இந்த நகர்வுகள் உள்ளதால் 15ஆம் திகதி நடைபெறும் சர்வக்கட்சி மாநாட்டில் அழுத்தமான பதிலொன்றை வழங்க கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தயாராகி வருவதாகவும் அறிய முடிகிறது.

இதேவேளை, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாளைமறுதினம் விசேட உரையொன்றையும் நிகழ்த்த உள்ளார்.

# கவிஞர் ஔவையின் கவிதை நூல்கள் வெளியீட்டு வைபவம்





(த.சுபேசன்)

கவிஞர் திருமதி சுவர்ணா கௌரிபாலா(ஔவை) எழுதிய ''திருத்தொண்டர் சரிதம் மற்றும் உண்மையைத் தேடி'' ஆகிய கவிதை நூல்களின் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் தென்மராட்சி கலாசார மண்டபத்தில் இடம் பெற்றிருந்தது.

சைவப்புலரும்,சிரேஷ்ட விரிவுரையாளருமான சி.கா. கமலநாதன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வு உசன் கந்தசுவாமி கோவில் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இ.கேதீஸ்வரக்குருக்களின் ஆசியுரையுடன் ஆரம்பமாகியிருந்தது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி வேல்நம்பியும்,

சிறப்பு விருந்தினராக சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகனும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இதன்போது நூல் வெளியீட்டு உரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையின் அதிபர் ச.லலீசன் நிகழ்த்த ,

நூலின் முதற்பிரதிகளை கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத்தின் தலைவர் இ.குழந்தைவடிவேல் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் சு.சுந்தரேஸ்வரன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

அத்துடன் நூல்களுக்கான ஆய்வுரைகளை கல்வியலாளர் க.தர்மராசா மற்றும் துணுக்காய் கல்வி வலய தமிழ் பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் சு.லோகேஸ்வரன் ஆகியோர் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை மாணவர் துஷ்பிரயோகம்: சந்தேக நபரான ஆசிரியர் போலிஸில் சரண்

(பாறுக் ஷிஹான்)

அரச பாடசாலை ஒன்றில் மாணவன் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபரான உடற்கல்வி ஆசிரியர் நிந்தவூர் பொலிஸில் சரணடைந்துள்ளார்.

தலைமறைவாகி இருந்த சந்தேக நபரான உடற்கல்வி ஆசிரியரை பொலிஸார் தேடி வந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை(6) மாலை தனது சட்டத்தரணி ஊடாக பொலிஸில் சரணடைந்துள்ளதாகவும் சந்தேக நபரை நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைக்காக ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ. எம் .நஜீம் உறுதிப்படுத்தியுள்ளார்.

கடந்த ஆகஸ்ட் 2 ஆம் திகதி பாடசாலை ஒன்றில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகி மாணவன் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் சந்தேக நபரான ஆசிரியர் தலைமைறைவாகி இருந்தார்.

குறித்த சந்தேக நபரான ஆசிரியர் அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பகுதியில் உள்ள பிரபல அரச பாடசாலை ஒன்றில் உடற்கல்வி ஆசிரியராக செயற்பட்டு வந்துள்ளதுடன் கடந்த ஜூலை மாதம் 19 ஆம் திகதி விளையாட்டு அறையில் வைத்து பாலியல் ரீதியாக மாணவனை துஸ்பிரியோக முயற்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அதிபரிடம் முறையிடப்பட்டிருந்தது.

குறித்த சம்பவம் இடம்பெற்று மறுநாள் பாதிக்கப்பட்ட குறித்த மாணவன் அதிபரிடம் முறையிட்டுள்ளதுடன் இரு வாரங்கள் கழிந்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் மூடி மறைப்பதற்கான முழு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என ஊடகங்களுக்கு பாதிக்கப்பட்ட மாணவனின் தாயார் தெரிவித்திருந்தார்.

இதனை அடுத்து இச் சம்பவம் குறித்து நிந்தவூர் பொலிஸார் குறித்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ள தரம் 9 வகுப்பில் கல்வி கற்கின்ற குறித்த மாணவனிடம் வாக்குமூலம் ஒன்றை இரு தடவை பெற்று சென்றிருந்ததுடன் மாணவனை துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்த முயற்சி செய்ததாக கூறப்படும் சந்தேக நபரான ஆசிரியர் தொடர்ந்தும் தலைமறைவாகி இருந்தார்.

இந்நிலையில் பாலியல் துஷ்பிரயோக முயற்சிக்கு உட்படுத்தப்பட்டதாக குறிப்பிடப்படும் மாணவன் கடந்த ஆகஸ்ட் புதன்கிழமை (2) மாலை கல்முனை அஷ்ரப் ஞாபகம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு வாக்குமூலங்களை வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கார்மேல் பாற்றிமா தேசிய பாடசாலையின் பழையமாணவர் சங்கத்தின் புதிய நிர்வாகசபைத் தெரிவு



(எஸ்.சபேசன்)

கல்முனை கார்மேல் பாற்றிமா தேசிய பாடசாலையின் பழையமாணவர் சங்கத்தின் புதிய நிர்வாகசபைத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதன் தலைவராக வணக்கத்திற்குரிய அருட்சகோதரர் எஸ்.ஈ.றெஜினோல்ட் ,செயலாளராக எந்திரி கே.கதீஸன் ,பொருளாளராக எஸ்.தர்சன் உப தலைவர்களாக வி.கோகிலராஜன், சட்டத்தரணி திருமதி கோகுலவாணி ரகுராம்என்.சங்கீத். உப செயலாளராக ரி.கே.பத்திரண, உறுப்பினர்களாக கே.பிரசான் , ஏ.சுதர்சன்,டபிளியு.ரி.செலர் ஆர்.ராகவன் ஏ.கிருஷாந்தன், எஸ்.உமாச்சந்திரன்,ஜே.ஏ.சுரேஸ்,எஸ்.யுவசாந்திரராஜா,எம்.அருணன்,திருமதி தட்சாயினி தேவகுமார்,திருமதி ஜெ.கிங்ஸ்ரன் மற்றும் ஆலோசகர்களாக எந்திரி கென்றி அமல்ராஜ், வைத்தியர் தெய்வேந்திரன்,திருமதி கு.தீபச்செல்வன் கணக்காய்வாளராக நிர்மலகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# நெல்லுக்கு நிர்ணய விலை இன்மையால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள்



(ஹஸ்பர்)


திருகோணமலை,கிண்ணியா பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட கரைச்சல் திடல் விவசாய நிலப் பகுதியில் நெல் அறுவடை தற்போது இடம் பெற்று வருகின்றது இருந்த போதிலும் இம் முறை சிறுபோகச் செய்கை அறுவடையில் பாரிய நஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். இப் பகுதியில் சுமார் 350 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்களில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடை இடம் பெற்று வருகின்றது.

தங்களுக்கான நெல் கொள்வனவில் நிர்ணய விலை இன்மை ,வெட்டுக் கூலி அதிகம் விளைச்சல் குறைவு என பல பிரச்சினைகளை எதிர் நோக்கியுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். தனியார் உரிமையாளர்டளே நெல்லை கொள்வனவு செய்கின்றனர் நிர்ணய விலை இன்மையால் பாரிய நஷ்டம் இலாபமற்ற அறுவடை எஞ்சியுள்ளதாகவும் அரசாங்கம் இதற்கு சாதகமான பதில்களை விவசாயிகளுக்கு வழங்கி நிர்ணய விலையை அறிவிக்க வேண்டும் .

ஒரு ஏக்கருக்கு 15 தொடக்கம் 20 ஏக்கர் வரையே விளைச்சல் கிடைத்துள்ளது எல்லாக் கூலிகளும் போக எஞ்சியிருப்பது ஒன்றுமில்லை நெல்லின் விலை ஒரு மூடை சாதாரணமாக 5000 ரூபா வரையே செல்கிறது இதற்காக அரசாங்கம் சரியான பதிலை தர வேண்டும் விவசாயத்தை நம்பியே நாங்கள் வாழ்கின்றோம் எனவும் தெரிவிக்கின்றனர். அரக்கொட்டியான் அடித்து ஒரு வகை மஞ்சல் நோய் தாக்கம் ஏற்பட்டதாளும் விளைச்சல் குறைவு .அரசாங்க களஞ்சியசாலை பாலடைந்து காணப்படுகிறது எனவே நிர்ணய விலையை பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

# மருதமடு அன்னையின் ஆலய கோடியேற்றம்






( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மறைமாவட்டத்தில் புனித ஸ்தலமாக விளங்கும் மருதமடு அன்னையின் ஆவணி மாதம் 15 ஆம் திகதி நடைபெற இருக்கும் பெருவிழாவை முன்னிட்டு 06.08.2023 அன்று ஞாயிற்றுக்கிழமை மடு அன்னை ஆலயத்தில் கொடியேற்றம் இடம் பெற்றது.

பாப்பரசர் கொடியை மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி பி.கிறிஸ்து நாயகம் அடிகளாரும் அன்னையின் ஆலயக் கொடிகளை. மடு பரிபாலகர் அருட்பணி பெப்பி சோசை அடிகளார் மற்றும் சகோதர மொழி பேசும் அடிகளார் ஒருவரும் ஏற்றி வைத்தனர்.

இதைத் தொடர்ந்து ஒன்பது தினங்கள் பிறபகல் நவநாட்கள் இடம்பெறுகின்றன.

# சுய நிர்ணயத்திற்கான மாற்றத்தின் முகவர்களாக பழங்குடியின் இளைஞர்கள்









( ருத்திரன்)

என்ற தொணிப்பொருளில் சர்வதேச பழங்குடிகள் தினம் இன்று வாகரை குஞ்சன் கல் குளத்தில் தங்களது கலை கலாச்சார நிகழ்வுகளுடன் நினைவு கூறப்பட்டது.

கிழக்கு மாகாண சிவில் அமையத்தின் ஏற்பாட்டில் நிகழ்வுகள் யாவும் இடம் பெற்றது.

பழங்குடியின் தலைவர் நல்லதம்பி வேலாயுதம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வானது மங்கள விளக்கேற்றல், குல தெய்வ வழிபாட்டுடன் ஆரம்பமானது.

தலைமை உரையை பழங்குடித் தலைவர் ந.வேலாயுதம் உரையாற்றினார்.அவர் தமது உரையில் வருகை தந்த அதிதிகளை விழித்துக் கொண்டு எதிர்வரும் 8.8.2023. ஆம் திகதியன்று நடைபெறவுள்ள உலக பழங்குடிகள் தின நிகழ்வின போது அங்கு வருகை தரும் பழங்குடி தலைமைகளிடம் பிரதானமான தமது தேவைகளை முன்வைத்து கலந்துரையாடுவதற்கான விடயங்களை கண்டறியும் தினமாகவும் சந்திப்பாகவும் இன்றைய தினம் அமையப் பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

தொடர்ந்து சிவில் அமையத்தின் தலைவர் ஜே.கோபிநாத் இன்றைய நிகழ்வின் சிறப்பு தொடர்பாக சிறப்புரையாற்றினார்.

பின்னர் அதிதிகள் சிறப்புரையாற்றினார்கள்.கிழக்கு பல்கலைக் கழக சமூக விஞ்ஞானத் துறை தலைவர் ஜி.விக்கினேஸ்வரன் கலந்து கொண்டு பல்கலைக் கழக மாணவர்கள்,விரிவுரையாளர்கள் மற்றும் நூல் ஆய்வாளர்களால் இலங்கையில் உள்ள பழங்குடியினர் தொடர்பான வாழ்வியல் விடயங்கள் ஆய்வு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட கட்டுரைகள் அடங்கிய நூல்கள்,ஆவணங்கள் என்பன பழங்குடித் தலைவரிடம் கையளிக்கப்பட்டதுடன் அவற்றினை பாதுகாப்பாக வைத்திருக்க ஆவணக் காப்பகம் ஒன்றும் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.பழங்குடி மக்களின் கலை கலாச்சார நிகழ்வுகளும் நடைபெற்றது.

நிகழ்வின் இறுதியில் கிழக்கு மாகாணத்தில் வசித்து வரும் பழங்குடி மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கான தீர்வினை வேண்டி கிழக்கு மாகாண ஆளுநருக்கு மனு சமர்ப்பிக்கப்பட்டது.

நிகழ்வில் அதிதிகளாக மதகுரு சிவஸ்ரீ ம.ரெயினு சர்மா,கிழக்கு மாகாண மனித உரிமைகள் ஆணைக் குழுவின் இணைப்பாளர் ஏ.எல்,இஸடின்,கிழக்கு பல்கலைக் கழக சமூக விஞ்ஞானத் தலைவர் ஜி.விக்னேஸ்வரன்,விரிவுரையாளர் யு.வி.தங்கராசா, மட்டக்களப்பு வன வள பாதுகாப்பு அதிகாரி,அருண, வாகரை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி,கிராசேவகர் சமூர்த்தி உத்தியோகஸ்த்தர் ஆகியோர்கள் கலந்து கொண்டனர். கிழக்கு பல்கலைக் கழக சமூக விஞ்ஞானத் துறை கற்கை நெறி மாணவர்களும் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சஜித் ஒரு குழப்பவாதி; நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான எவ்வித திட்டமும் அவரிடம் கிடையாது அரகலய போராட்டக்காரர்களின் கோரிக்கைகள் ஐ.தே.க. விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்படும்

## கல்முனையில் ஐ.தே.க. செயலாளர் ரங்கே பண்டார தெரிவிப்பு





(ஏ.எஸ்.மௌலானா)

சஜித் ஒரு குழப்பவாதி. கட்சிக்குள் குழப்பங்களை ஏற்படுத்தி, நாட்டை முன்னேற்றும் வல்லமை மிக்க ஐக்கிய தேசியக் கட்சியை உடைத்ததே அவர் புரிந்த சாதனையாகும். நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான எவ்வித திட்டமும் சஜித் பிரேமதாசவிடம் கிடையாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

அரகலய போராட்டக்காரர்களின் கோரிக்கைகள் ஐக்கிய தேசிய கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கல்முனையில் ஞாயிற்றுக்கிழமை (06) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

தனது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்காக

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஒற்றுமைக்கு குந்தகம் விளைவிக்கும் செயற்பாடுகளிலேயே அதிகம் ஈடுபடுவார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எப்போதும் ஒற்றுமைக்காக பாடுபடுகின்ற ஒரு தலைவராக திகழ்கிறார். ஏனென்றால் அவருக்கு தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் கிடையாது. இன்று பல தரப்பினையும் ஒன்றிணைத்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்கிறார்.

அதனால்தான் அதல பாதாளத்தில் வீழ்ந்திருக்கின்ற பொருளாதாரத்தை மீட்டெடுத்து, நாட்டை கட்டியெழுப்புகின்ற திட்டங்களுடன் முழுமூச்சாக செயற்படுகின்ற ஜனாதிபதி ரணிலுடன் இன்று உலக நாடுகளின் தலைவர்கள் கைகோர்த்துள்ளனர்.

ஒரு வருடத்திற்கு முன்பு நாடு இருந்த நிலைமையை மீட்டிப்பாருங்கள். மக்கள் நடுத்தெருக்களில் வரிசைகளில் அல்லல்பட்டனர். சிலர் தெருக்களிலேயே மரணித்தனர். மக்கள் நிம்மதியிழந்து, துன்பப்பட்டனர். உரிய தருணத்தில் ஜனாதிபதி ரணில் துணிச்சலுடன் முன்வந்து, நாட்டை பொறுப்பேற்றிருக்கா விட்டால் என்ன நடந்திருக்கும். நிலைமை இன்னும் படுமோசமான நிலைக்கு சென்றிருக்கும். எமது தேசமும் சர்வதேசமும் ஏற்றுக் கொண்ட ஒரே தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திகழ்கிறார். அவர் ஜனாதிபதியாக நீடிக்க வேண்டும். இன்றைய சூழ்நிலையில் பாராளுமன்ற தேர்தலோ மாகாண சபைத் தேர்தலோ உள்ளூராட்சி தேர்தலோ அவசியமில்லை. இவற்றால் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மாத்திரமே பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும். அதனை அவர் வெற்றிகரமாக முன்கொண்டு செல்கிறார். ஆகையினால் ஜனாதிபதி தேர்தல் ஒன்று நடத்தப்பட்டு அவரது இருப்பு உறுதி செய்யப்பட வேண்டும். அரகலய போராட்டக்காரர்கள் வேண்டி நிற்கின்ற குதூண்ஞுனுட் இடச்ணஞ்னு - முறைமை மாற்றம் தொடர்பிலான முன்மொழிவுகள், கோரிக்கைகள் ஐக்கிய தேசிய கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்படும்- என்று பாலித ரங்கே பண்டார மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர் தயா கமகே, முன்னாள் பிரதி அமைச்சர்களான மயோன் முஸ்தபா, அனோமா கமகே, ஐ.தே.க. கிழக்கு மாகாண முஸ்லிம் பிரதேசங்களுக்கான ஒருங்கிணைப்பாளர் ஏ.எம். ஜெமீல் உள்ளிட்டோரும் உரை நிகழ்த்தினர்.

# ஆசிரியர் விடுதலை முன்னணி தமது அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்




(தலவாக்கலை பி.கேதீஸ்)

ஆசிரியர் விடுதலை முன்னணி தமது அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நுவரெலியா புனித சவேரியார் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வுகள் அதன் செயலாளர் நாயகம் என்.டி.எஸ்.நாதன் தலைமையில் நடைப்பெற்றது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த முன்னணியின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும் அதேபோல க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்த முன்னணியின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் முன்னணியின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும் இப் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக நுவரெலியா வலயக் கல்விப் பணிப்பாளர் லசந்த அபேரட்ண, விசேட அதிதியாக உதவி கல்விப் பணிப்பாளர் கணேஸ்ராஜ் மற்றும் ஆசிரியர் விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் என்.டி.எஸ்.நாதன், அதன் தலைவர் சிவாநந்தன், பொருளாளர் வி.கங்காதரன் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வில் நுவரெலியா வலயக் கல்விப் பணிப்பாளர் லசந்த அபேரட்ண, உதவி கல்விப் பணிப்பாளர் கணேஸ்ராஜ் ஆகியோர் ஆசிரியர் விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் என்.டி.எஸ்.நாதன் அவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப் பட்டனர்.

# லேடி ரிஜ்வே சிறுநீரக சிகிச்சை சம்பவம்

## 5 அம்சங்களை வலியுறுத்தி ஜனாதிபதிக்கு அசாத் சாலி கடிதம்!



பொரளை லேடி ரிஜ்வே வைத்தியசாலையில் நடந்த முறைகேடான சிறுநீரக அறுவைச் சிகிச்சை குறித்து சுதந்திரமான விசாரணைகள் நடாத்தப்பட வேண்டுமென தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் முன்னாள் ஆளுநருமான அசாத் சாலி வேண்டுகோள் விடுத்துள்ளார். ஐந்து விடயங்களை வலியுறுத்தும் வகையில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அவர் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது;

முஹம்மட் ஹம்தி எனும் குழந்தைக்கு லேடி ரிஜ்வே வைத்தியசாலையில் நடாத்தப்பட்ட சிறுநீரக அறுவைச் சிகிச்சையின்போது இடம்பெற்ற கொடூரத்தை தங்களது மேலான கவனத்திற்கு கொண்டுவருகிறேன். சிறுவனின் செயலிழந்த இடது பக்க சிறுநீரகத்தை அகற்றுவதற்குப் பதிலாக, திறம்படச் செயற்பட்ட வலது பக்க சிறுநீரகம் அகற்றப்பட்டிருக்கிறது. இதனால், முஹம்மட் ஹம்தி என்ற மூன்று வயதுக் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் நாட்டில் பெரிய அதிருப்தி அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளதை தாங்கள் அறிந்திருப்பீர்கள்.

ஆனால், அறுவைச் சிகிச்சையில் நடந்த தவறை மறைக்கும் வகையிலேயே மருத்துவச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது. இதனால், இச் சிகிச்சைக்குப் பின்னால் பாரிய மோசடி இடம்பெற்றிருப்பதாக பலத்த சந்தேகமும் ஏற்பட்டுள்ளது. தவறுதலாக நடந்ததா? அல்லது திட்டமிட்டுத் திருடப்பட்டதா? என்பதை அறிவதில் மக்கள் ஆர்வமாக உள்ளனர்.

அவயங்கள் அபகரிப்பு மற்றும் சிறுநீரக மோசடியுடன் தொடர்புடைய மோசடிப் பேர்வழிகளின் கரங்கள் இதற்குப் பின்னாலிருந்திருக்கலாம். எனவே, இதுகுறித்த பின்னணிகளை அறிவதற்கு சுதந்திரமானதும், நியாயமானதுமான விசாரணைகளை நடத்துமாறு நான் கோருகிறேன்.

மருத்துவத்துறையை மாபியாக்களின் செல்வாக்கிற்குள் கொண்டுவரும் இவ்வாறான மறைமுக முயற்சிகளை நிறுத்துவதற்கு இவ்விசாரணைகள் உதவட்டும். சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தும் வகையில், இவ் விசாரணைகள் அமைவது அசியம். தங்களது நேர்மையான தலைமைத்துவம் இதைச் செய்யுமெனவும் நான் நம்புகின்றேன்.

01. மருத்துவ நிபுணர்கள், தடயவியல் திறமையாளர்கள் மற்றும் சட்ட வல்லுநர்களைக் கொண்ட குழுவினரின் தலைமையில் விசாரணை நடாத்தப்படல்.

02. முஹம்மட் ஹம்தியின் சிறுநீரக அறுவைச் சிகிச்சையில் ஈடுபட்டிருந்த அறுவைச் சிகிச்சையாளர்கள், வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் சிற்றூழியர்களை விசாரணைக் குட்படுத்தல்.



03. சிறுவனின் சிறுநீரக மோசடியுடன் தொடர்புற்றிருந்த சகல வாஞ்சகர்களையும் சட்டத்தின் வெளிச்சத்துக்கு கொண்டுவருதல்.

04. குழந்தையின் சிறுநீரக சிகிச்சை சம்பந்தமான தகவல்களை வழங்குவோரின் அல்லது வழங்க முன்வருவோரின் இரகசியங்களைப் பாதுகாத்தல்.

05. அறுவைச் சிகிச்சைகளின் போது அவயங்களைப் பாதுகாப்பதற்கான உத்தரவாதத்தை வழங்கும் வகையில், பாதுகாப்பை உறுதிப்படுத்தல்..

என்பவற்றை வலியுறுத்தியே அசாத் சாலி இந்தக் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளார்.

# இ.கி.மிசன் சுவாமி நீலமாதவானந்தா ஜீயின் இந்து மதம் ஒரு பார்வை நூல் வெளியீட்டுவிழா

( வி.ரி.சகாதேவராஜா)

இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு மாநில பொதுமுகாமையாளரும் எழுத்தாளருமான ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் எழுதிய 'இந்து மதம் ஒரு பார்வை' என்ற நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

ராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு, சுவாமி விவேகானந்தரின் இலங்கை வருகையை ஒட்டி 125 ஆண்டுகள் பூர்த்தியை கொண்டாடும் முகமாக இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

உலகளாவிய ராமகிருஷ்ணமடம் மற்றும் ராமகிருஷ்ணமிஷனின் துணைத் தலைவரும் சென்னை ராமகிருஷ்ண மடத்தின் தலைவருமான அதிவண. ஸ்ரீமத் சுவாமி கௌதமானந்த ஜீ மகராஜ் அவர்களால் அந்நூல்வெளியிட்டு வைக்கப்பட்டது .

இந்த நிகழ்வில் ராமகிருஷ்ண மிஷன் கொழும்பு முன்னாள் தலைவர் சுவாமி சர்வரூபானந்தாஜி மகராஜ் மற்றும் ராமகிருஷ்ண மிஷன் கொழும்பு உப தலைவர் சுவாமி அக்ஷராத்மானந்தஜி மகராஜ் அவர்கள் மற்றும் துணை பொது தலைவரின் செயலாளர் சுவாமி யாதவேந்ரானந்தஜி மற்றும் சுவாமி சுரார்சிதானந்தஜி ஆகியோர் கலந்து கொண்டனர் .

கடந்த மூன்று ஆண்டுகளாக இ.கி.மிசன் வெளியிட்டு வரும் இராமகிருஷ்ண விஜயத்தில் சுவாமி நீலமாதவானந்தா ஜீ 'அறிந்து கொள்வோம் சனாதன தர்மத்தை' என்ற தலைப்பில் தொடராக எழுதிவந்த ஆன்மீக கட்டுரைகள் 37 இந்த நூலில் தொகுக்கப்பட்டிருக்கின்றன.

இந்தியா சென்னை மயிலாப்பூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் வெளியிட்ட இந்த நூல் இந்து மதத்தின் பல்வேறு சாஸ்திரங்களையும் பல்வேறு பிரிவுகளையும் ஆராய்கிறது.

37 கட்டுரைகளையும் 10 உப இணைப்புகளையும் கொண்ட இந்த நூல் ஆசிரியர்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் மேயர் தி. சரவணபவன் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாநிதி பத்ம ராஜா ,கிழக்கு பல்கலைக்கழக வேந்தர் மா.செல்வராஜா மற்றும் வர்த்தக பிரமுகர்கள் அரசு உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் ராமகிருஷ்ண மிஷினுடன் நூறாண்டுகளாக பயணிக்கும் 26 நிறுவனங்களுக்கு பாராட்டு பத்திரமும் கேடயமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது

இதேவேளை, எழுத்தாளர் சுவாமி நீலமாதவானந்தா ஜீ ,முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் தொடர்பாக நீண்ட ஒரு ஆவண பெட்டகத்தை தயாரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் இலத்திரனியல் கழிவுகளை சேகரிக்கும் நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுப்பு

மன்னாரில், இலத்திரனியல் கழிவுகளை சேகரிக்கும் நிகழ்ச்சித் திட்டம் நேற்று மாவட்ட செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் இலத்திரனியல் கழிவுகளை சேகரிக்கும் நிகழ்ச்சித்திட்டம் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மன்னார் மாவட்ட அலுவலகத்தினால் இன்று மன்னார் மாவட்டச் செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மன்னார் மாவட்ட பொறுப்பதிகாரி யக்கோ பிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்டான்லி டிமெல் கலந்து கொண்டார்.

மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் பிரதேச செயலாளர்கள், வைத்தியர் ஒஸ்மன் டெனி, திணைக்கள தலைவர்கள், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்டவர்களும் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

இலத்திரனியல் கழிவுகளை முறையாக சேகரிப்பதன் மூலம் சுற்றாடலை பாதுகாத்தலும், முகாமைத்துவம் செய்தலும் எனும் கருப்பொருளின் கீழே இந்த நிகழ்வு ஆரம்பமானது.

இதில் முதற் கட்டமாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் வலயக்கல்விப்பணிப்பாளர் ஆகியோர் இலத்திரனியல் கழிவுகளை மாவட்ட பொறுப்பதிகாரியிடம் கையளித்தனர்.

நேற்று முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமைவரை இலத்திரனியல் கழிவுகளை மன்னார் மாவட்டச் செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இடத்தில் ஒப்படைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



## எழுதத் தூண்டும் எண்ணங்கள் : 10

# வாழ்வாங்கு வாழ்தலும் சுகமானதே

**இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்தலென்பது இல்வாழ்வில் விதிக்கப்பட்டபடி வாழ்வதே..**

நமக்காக இந்த உலகம். உலகத்துக்காக நாம் என்றவகையில் இவ்வுலகம் சகல சிவராசிகளுகுமாகப் படைக்கப்பட்டிருக்கிறது. ஒன்று ஒன்றின் சமநிலையைப் பேணுகிறது. ஒரு சங்கிலித் தொடர் போல் எல்லாம் அமைந்து இயங்கிக் கொண்ருக்கின்றது. இந்த சங்கிலித் தெடர்பும் சமநிலையும் குழம்பாதவாறு மனிதன் வாழ்ந்திருக்கலாம். யாவும் மாறிக் கொண்டே இருக்கும். மாற்றம் ஒன்றுதான் நிரந்தரம் என்ற அடிப்படையில் எல்லாம் மாறிக் கொண்டிருக்கின்றன. இது ஒரு நேரான மாற்றம். இந்த மாற்றத்துக்கு எதிரான மாற்றங்களை உருவாக்கும் போது உலகில் எதிர்மறைத் தாக்கம் நிலை நிறுத்தப்படுகின்றன. விஞ்ஞான, தொழினுட்ப மாற்றங்களும் கண்டு பிடிப்புக்களும் மனிதனிடம் புதிய உத்வேகத்தை ஏற்படுத்தின. இயற்கைச் சமநிலைக்கும் சவால் விட்டுக் கொண்டு உயிரினங்களுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய பல கண்டுபிடிப்புக்களையும் மேற்கொண்டான். அதன் விளைவு புவி வெப்பமடைதல், காலநிலை மாற்றம், பச்சை வீட்டு விளைவு ஆகியவற்றுடன் வளி மாசடைதல், சூழல் மாசடைதல், ஓசோன் படையில் ஓட்டை, காலநிலை வட்டம் குழம்புதல் எனப் பல மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இதனால் மனித குலத்துக்கு மாத்திரமின்றிச் சகல உயிரினங்களுக்கும் ஆபத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இதுவே நிரந்தரமாகவும் இருக்கப் போகின்றது. இவற்றுக்கு ஈடுகொடுத்து வாழ்வாங்கு வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

நமது வாழ்கை இன்னொருவருக்கு வலி, வேதனை, துன்பம் துயரை ஏற்படுத்துவதாகவோ மற்றவர் மீது பழி சுமத்துவதாகவோ, பொறாமை கொள்வதாகவோ, பழி வாங்குவதாகவோ இருக்கக் கூடாது. நமக்குரிய நமது வாழ்க்கையைச் சந்தோசமாக வாழ முற்படும் போது பிறருக்கும் துனபம் செய்ய மாட்டோம். இல்லாத ஒன்றுக்காக ஆசைப்படாது, இருப்பதைக் கொண்டு மனத் திருப்தியோடு வாழ முற்படும்போது நாமும் துன்பம் துயரின்றி நின்மதியாக வாழலாம். 'வாழ்க்கை நமதே வாழ்ந்துதான் பார்ப்போமே'! என்ற நேரான சிந்தனை நம்முள் இருந்தால் எநத இடத்திலும் நிம்மதியாக வாழலாம். நாம் இவ்வுலகில் வந்து பிறந்தது நமக்கென விதிக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே. நாம் நிறைவேற்றுவதற்கான கடமையும் பொறுப்பும் நம்மீது சுமத்தப்பட்டிருக்கின்றன.

நாம் அரச தொழிலொன்றைப் பொறுப்பெடுக்கும் போது நம்மில் எத்தனை பேர் அத்தொழிலில் நம்பிக்கை, விசுவாசம், திருப்தி, கடமை, பொறுப்பு, வகைகூறலோடு செய்யும் தொழிலே தெய்வம் என்ற அர்ப்பணிப்போடு பணியாற்றி இருகின்றோம். அத்தொழில் ஊடாக மக்கள் மனங்களில் நம்பிக்கையான நீங்கா இடம் பிடித்திருக்கிறோமா? என்பதை நாமே நமக்குள் கேட்டுப்பார்க்க வேண்டும். கேட்டுப் பார்க்க முடியவில்லை எனில் என்னுடைய நடத்தையை, என்னுடைய செயலை, என்னுடைய பணியை நான் மீள் பரிசீலைனை செய்து என்னை மாற்றிக் கொள்ள முயலவில்லை என்பதே அர்த்தமாகிறது. நாம் நமக்கென வழங்கப்பட்ட தொழிலை நேசித்து, விசுவாசத்தோடு அர்ப்பணிப்புடன் செயற்பட்டிருந்தால் நாம் நமது இலக்கை அடைந்திருக்கலாம். இன்று பலர் இவ்வாறு செயற்படுவதில்லை. தொழிலையும் அதனூடாக வந்த கடமைப் பொறுப்புக்களையும் ஏனோ தானோ என்று பலர் கடமைக்காக நிறைவேற்றுகின்றனர். இவர்களால் தொழில் திருப்தியையோ இலக்கையோ அடைய முடியாது. இதே போலவே நமது படைப்பின் நோக்கத்தையும் கடமைப் பொறுப்புக்களையும் நிறைவேற்றத் தவறிய எவரும் வாழ்வின் இலட்சியத்தை அடைய முடியாது. அவர்கள் எப்போதும் மனதில் சலனம், சஞ்சலம், பதட்டம், நெருக்கீடு, பதகளிப்பு என்பவற்றுடனேயே வாழ்ந்து கொண்டு இருப்பார்கள்.

முயற்சியும் நம்பிக்கையும் பயிற்சியும் உள்ளவர்கள் மாத்திரமே தமது உயரிய இலக்கை அடைவார்கள். இவர்களை இறைவன் அடுத்த இலக்கை அடைய வைப்பதற்காக ஆசீர்வதித்துக் கொண்டிருப்பான். இவர்களால் மட்டுமே தமக்கெனப் படைக்கப்பட்ட இந்த உலகில் இருந்து எதனையும் அடைந்துவிட முடியும். இத்தகையவர்கள் கடவுள்மீது நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டிருப்பார்களே தவிர மூடத்தனமான, போலியான பக்தி கொண்டிருக்கமாடடார்கள். இவர்கள் இறைவனிடம் எதையும் கேட்டுப் போக மாட்டார்கள். இறைவன் இவர்களுக்கு நம்பிக்கையை ஊட்டிக் கொண்டிருப்பான். முயற்சியும் பயிற்சியும், நம்பிக்கையும் இல்லாதவர்கள் வாழ்வில் எந்தவித இலட்சியமும் இல்லாதிருப்பார்கள். இவர்கள் எப்போதும் மற்றவர்களை எதிர்பார்த்துக் கொண்டு வாழ்வார்கள். இவர்கள் இறைவனைக் கொடுக்கல், வாங்கல் செய்பவராகவே கருதிக் கொள்வார்கள். கோயிலுக்குச் சென்று இறைவனிடம் தமது துன்பம், கஷட்ங்கள், துயரங்ளைக் கூறத் தனது பலவீனத்தை வெளிக்காட்டுவார்கள். பலவீனமான இவர்களை இறைவன் என்றுமே கண்டு கொள்ளவேமாட்டான்.

அமெரிக்க ஜனாதிபதிகளான ஆபிரகாம் லிங்கன், பில் கிளிங்டன், இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி, இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம், மகா அலெக்ஸாண்டர், நெப்போலியன் பொனபாட், அடோல்ப் கிட்லர், தோமஸ் அல்வா எடிசன், பில்கேட், எலான் மஸக் போன்றவர்களெல்லாம் வாழ்க்கையில் இலச்சாதிபதிகளாகப் பிறக்கவில்லையே. சாதாரணமான குடும்பத்தில் இந்த உலகில்தான் அவர்களும் பிறந்தார்கள். அவர்களின் வெற்றிககு இந்த உலகையே மூலதனமாகப் பயன்படுத்தினார்கள். முயற்சி, நம்பிக்கை, பயிற்சியைக் கொண்டு விடா முயற்சியோடு செயற்பட்டதனால் வாழ்க்கையில் வெற்றியடைந்தார்கள். இவர்களைப் போல் இன்னும் பலரைக் கூறலாம். இவர்களது வாழ்க்கையும், நமது முன்னோர் வாழ்ந்து காட்டிய நெறி முறையான வாழ்க்கையும் நமது வாழ்க்கைக்கு நம்பிக்கையையும் படிப்பினையையும் தருகின்றன. 'வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள் பாடமடி..' என்பது போல் அவர்களின் வாழக்கையை முன்னுதாரணமாகக் கொண்டு மாற்றங்களை உள்வாங்கித் தேவையற்றதையும், போலிகளையும், முடநம்பிக்கைகளையும் விட்டொதுக்கி நமது வாழ்க்கையை



வாழ்வாங்கு வாழ்தல் வேண்டும். இந்த வாழ்க்கையே என்றும் எப்போதும் நமக்கு முழு நம்பிக்கையையும் வெற்றியையும் மன நிறைவையும், மகிழ்ச்சியையும் கொடுக்கும்.

புராண இதிகாசங்கள், சங்க இலக்கிய நூல்கள், காப்பியங்கள், திருமுறைகள், சைவ சித்தாந்த சாத்திர நூல்களும் பிற்காலத்தில் தோன்றிய சமய, சாத்திர நூல்கள் யாவும் நமது வாழ்க்கையை வளப்படுத்துவதற்கான பல நெறி முறைகளைக் கூறுகின்றன. அவற்றுள் சில நடைமுறைச் சாத்தியங்கள் இல்லாவிட்டாலும் அவற்றுள் பல விடயங்கள் நம்மை நல்வாழ்வுக்கு வழிப்படுத்துகின்றன. அவற்றுள் பல வாழ்க்கைத் தத்துவங்கள் அடங்கி இருக்கின்றன. முன்னோர் வாழ்ந்த வாழ்க்கை முறைகள், வாழ்க்கை நெறி முறைகள், பண்பாடு, பழக்க வழக்கம், ஒழுக்க விழுமியங்கள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றை நாம் கற்றுத் தேர்ந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிவகுக்கிறது. தெய்வ நம்பிக்கையும் சமய நெறி முறைகளும் ஒழுக்க முறையான வாழ்க்கை வாழ உதவுகிறது. பிள்ளைகளுக்குத தெய்வ, சமய நம்பிக்கைகளையும் ஒழுக்க விழுமியங்களைளயும் வாழ்கைத் தத்துவங்களையும் சொல்லிக் கொடுக்கும்போது அவற்றுக்குக் கட்டுப்பட்டு நெறி முறையான வாழ்க்கை வாழப் பழகிக் கொள்வார்கள். எதிர்மறையான வாழ்க்கையை விடுத்து நம்பிக்கை



**சோலையூர்க் குருபரன்**

யான நெறி முறையான வாழ்க்கை வாழ்வதற்குப் பழகிக் கொள்வார்கள். இந்த நிஜமான வாழ்க்கையின் உண்மைத் தன்மையை விளங்கிக் கொண்டு நம்பிக்கையோடு வாழ்வார்கள்.

தெய்வ, சமய நம்பிக்கைகள் பாவங்கள் செய்வதில் இருந்து விடுபட்டு பெரியோருக்கு மதிப்பளித்து நம்பிக்கையோடு வாழ்வதற்கும் சமய, சம்பிரதாயங்களைக் கடைப்பிடித்து ஒழுக்கத்தோடு வாழ்வதற்கு வழிவகுக்கிறது. தெய்வ, சமய நம்பிக்கைகள் அடிமனதில் பதிவதனால் தெய்வங்கள் மீது பக்தியும் பெரியோரிடத்தில் மதிப்பும் மரியாதையும், தாய், தந்தையர் உறவினரிடத்தில் அன்பு கருணை, மதிப்பு, மரியாதையும், சிறியோரிடத்தில் அன்பு, கருணை, பாசம், நேசம், பரிவு, விட்டுக் கொடுத்து வாழும் நல்ல பண்புகளும் விருத்தியடைய உதவுகிறது. விரதங்களும் விசேட தினங்களும் மனவடக்கம், நாவடக்கம் மற்றும் கட்டுப்பாடுகளோடு வாழ்வதற்கு உதவுகிறது. குறித்த தினங்களில் கட்டுப்பாடாக இருப்பதோடு மனம், மொழி, மெய்களால் தூய்மையாக இருப்போம். இது மனம் பொறிவழி போகாது கட்டுப்பாட்டுக்குள் இருப்பதற்கு உதவுகிறது. இந்த வாழ்க்கை சுகமானதாவும் அமையும். விரத காலங்களில் உணவைச் விடுத்தும், ச கட்டுப்பாட்டோடு இருப்பதனால் குடல் வெறுமையடைந்து அதிலுள்ள ஒட்டுண்ணிகள், புளுக்கள், அழுக்குள் வெளியேறிக் குடலைச் சுத்தமாக வைத்துச் சுகதேகியாக வாழ்வதற்கு உதவுகிறது. இவற்றையெல்லாம் பின்பற்றி வாழ்வாங்கு வாழ்தலே சுகமான வாழ்க்கையுமாகும்.

முனனுள்ளோர் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வேதிக்குக் குடித்து குடலைச் சுத்தப்படுத்தி ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள். இப்போது நவீன ஆங்கில மருத்துவம் அவர்களின் பக்க விளைவுள்ள மாத்திரைகளை விற்பனை செய்வதற்காகப் பக்கவிளைவற்ற நாட்டுச் சித்த வைத்திய வேதிமாத்திரைகளைப் பாவிப்பதனால் குடல் புண் வருமெனத் தடுத்து வேதிக்குக் குடிப்பதைத் தடுத்துப் பலரை நோயாளிகளாக மாற்றி இருக்கின்றன. நவீன ஆங்கில மருத்துவர்கள் பலர் பழஞ்சோறு (தண்ணீர்ச் சோறு) சாப்பிடுவது உடல் நலத்துக்குக் கேடு எனக் கூறப் பழஞ்சோறு சாப்பிடாமலாக்கி இருக்கின்றனர். பழஞசோற்றினைப் பழுதடைவதற்கு முன்னர் சாப்பிட வேண்டும். பழஞ்சோறு நமது மூளையின் சிந்தனாசக்தி வளர்ச்சிக்கும், ஞாபக சக்தி விருத்திக்கும் உதவுகிறது. அத்தோடு உடல் சூட்டைக் குறைத்து உடல் ஆரோக்கியத்தையும் பேணுகிறது. சிறுவர்களின் மூளை விருத்திக்கு பழஞ்சோறு கொடுக்க வேண்டும் என அண்மைய ஆய்வுகள் கூறுகின்றன. பழுஞ்சோற்றுக்குள் அதிகாலையில் தண்ணீர் ஊற்றி வைத்துத் தேங்காயப் பால், உப்பு, சிறிதளவு சீனி சேர்த்துச் சாப்பிட்டு வருவதனால் உடல் சூடு குறைந்து உடலுக்குத் தெம்பைத் தருவதாகக் கருதி முன்னோர் தினமும் உண்டு வந்தனர். பழஞ் சோற்றில் மாப்பொருள், உடலுக்குத் தீங்கு செய்யாத பக்றீரியாக்கள், தேங்காயப் பாலில் தீங்கு செய்யாத கொழுப்பு, பழம் சேர்ப்பதால் புரதம் ஆகியன கொண்ட நிறை உணவு கலந்துள்ளது. நீரிழிவு நோய் உள்ளவர்கள் சீனியைத் தவிர்க்கலாம். அத்தோடு பெரியோர் சிறிதளவு மிளகாய், வெங்காயம், புளி சேர்த்துச் சாப்பிலாம். குடல் புண் இருப்பவர்கள் இதனைச் சேர்ப்பதைத் தவிர்த்துக் கொள்ளலாம். பழஞ்சோறு உண்டு வாழ்வதும் சுகமான வாழ்க்கைதான்.

முன்னோர் வீட்டைவிட்டு வெளியே சென்று வந்ததும் கால் கழுவாமல் வீட்டுக்கள் நுழையமாட்டார்கள். வெப்பம் கால்கள் வழியாக உள்நுழைந்து கண், காது, மூக்கு, வாய், தோல் வழியாக வெளியேறுகிறது என்பதனால் காலைக் கழுவுவி உடலுக்குச் செல்லும் வெப்பத்தைச் சிறிது நேரம் கட்டுப்படுத்தி உடலுக்கும் தலைக்கும் குளிர்ச்சியைக் கொடுத்து உடல் ஆரோக்கியத்தைப் பேணினார்கள். இரண்டாவது காரணம், வெளியில் சென்று வரும்போது காலில் அழுக்குகள் பட்டிருக்கும் என்பதனாலும் காலைக் கழுவினார்கள். இப்போது அந்த வழக்கவாறுகள் எல்லாம் அருகிக் கொண்டு செல்கின்றன.

முன்னோர் குளித்து நீராடும் போதுகூட உடல் ஆரோக்கியத்தைப் பேணினார்கள். கால் வழியாக உடலில் வெப்பம் ஏறுவதனால் நீராடும்போது முதலில் கால்கள், இடுப்பு, உடம்புக்கு நீரை ஊற்றிய பின்னர் இறுதியாகத் தலையில் நீரை ஊற்றி நீராடுவார்கள். அதனால் உடல் வெப்பம் படிப்படியாகக் குறைந்து தலை வழியாக வெளியேறிய பின்னரே தலையில் நீர் ஊற்றி உடல் ஆரோக்கியத்தைப் பேணினார்கள். ஆறு, குளம், குட்டை, நீருற்று, ஏரி, ஓடை, வாயக்காலில் நீராடுவது இந்தத் தத்துவத்தையே உணர்த்தி நிற்கிறது.

முன்பெல்லாம் வீடுகளில் எண்ணெய்யில் பொரித்த உணவுப் பண்டங்களைக் காண்பது அரிது. வீட்டு விசேடம், நல்ல நாள், பணிடிகைக் காலங்களில் பொரித்த உணவைக் காணலாம். அதிலும் முதலில் பொரித்த பொரியலை முதியோருக்கும், பின்னர் பொரித்ததை நடுத்தர வயதினருக்கும், இறுதியாகப் பொரித்ததைச் சிறுவர்களுக்கும் கொடுப்பார்கள். எந்த எண்ணெயாக இருந்தாலும் கொதிக்க வைக்க முன்னர் கொழுப்பு ஏ௯ீ நிலையில் உறங்கி இருக்கும். எண்ணெய் கொதிக்கக் கொதிக்க உடலுக்குத் தீங்கு செய்யும் ௐ௯ீ கொழுப்பாக மாறிக் கொண்டு செல்லும். அதனால் இறுதியாகப் பொரித்த உணவினைச் சிறுவர்களுக்கு வழங்கினார்கள். சிறுவர்கள் உடல் களைத்து வியர்க்க விளையாடுவதனால் கொழுப்புக் கரைந்து வியர்வையாக வெளியேறிவிடும். இப்போதெல்லாம் சிறுவர்களுக்குப் பிரத்தியேக வகுப்புக்களுக்குச் செல்வதனால் விளையாட்டை மறந்து விட்டார்கள். அதனால் சிறுவர்களுக்கு உடல் பருமன் கூடிக்கொண்டு செல்கிறது. இப்போதைய வீடுகளில் சுத்தமான தேங்காய் எண்ணெய் எடுப்பது சிரமமாதலால் பாம் எண்ணெயில் பொரித்த, தாழித்த உணவுகள் தினமும் சமைத்து வழங்கப்படுகின்றன. இவ்வாறான உணவைக் கொடுத்து நோய் எதிர்ப்புச் சக்தியை இல்லாமலாக்கி எல்லோரையும் நோயாளிகளாக்கிச் சிகிச்சை நிலையங்களும் மருந்தும் கையுமாக அலைந்து திரிகின்றனர்.

முன்பு நெல்லைச் சிலிர்க்க அவித்து வெயிலில் காய வைத்து உரலில் இட்டு உலக்கையினால் குற்றி சுளகினால் புடைத்து உமி நீக்கி அரிசி எடுப்பார்கள். அப்போதெல்லாம் கடைகளில் அரிசி வாங்கமாட்டார்கள். நெல்லை அவிக்கும்போது அதிலுள்ள சீனி வெளியேறி நீருடன் கலந்துவிடும். அந்த நீரை ஊற்றி விடுவார்கள். இவ்வாறு எடுத்த அரிசியைக் கொண்டே சோறு சமைப்பார்கள். சோறு சமைக்கும்போது நிறுகஞ்சி எடுத்துச் சிறுவர்களுக்குக் கொடுப்பார்கள். சிறுவர்கள் வீட்டில் இல்லை என்றால் நிலத்தில் ஊற்றி விடுவார்கள். அரிசியில் இருந்த மிகுதிச் சீனி நிறுகஞ்சியோடு வந்து விடும். முன்பு இவ்வாறுதான் சோறு சமைப்பார்கள். அப்போதெல்லாம் நீரிழிவு நொயாளிகளைக் காண்பது மிமி அரிது. இப்போது சோறு சமைப்பானில் (Rice Cooker) சமைக்கிறார்கள். பெரும்பாலும் கடையில் கொள்வனவு செய்த வெள்ளை அரிசியைக் கொண்டே சமைப்பதனால் அரிசியிலுள்ள சீனி அனைத்தும் சோற்றுடன் கலந்து விடுகிறது. இந்தச் சோற்றைத் தனமும் இருமுறை சாப்பிடுபவர்களுக்கு நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளது என ஆய்வுகள் கூறுகின்றன. இன்று 65 வீதத்துக்கு மேற்பட்டோர் நீரிழிவு நோயாளிகளாக இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைகின்றன.

முன்னர் சிறிது சீனியை உள்ளங்கையில் எடுத்து நாவினால் நக்கித் தேநீர் குடிப்பார்கள். அல்லது சர்க்கரை, கருப்பெட்டி, சீனி மிட்டாய் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றைக் கடித்துத் தேநீர் குடிப்பார்கள். பல இடங்களுக்கு நடந்தே செல்வார்கள். இயற்கையில் இருந்து கிடைத்தவற்றை உண்டு மகிழ்ந்தார்கள். உருளைக் கிழங்கு சமைப்பது மிகக் குறைவு. இப்போது போல் அல்லாமல் வருடத்தில் ஒருமுறை மாரி காலத்தில் தாத்திமே மரவள்ளிக் கிழங்கு கிடைக்கும். மாரி காலத்தில் மரவள்ளி அவித்து அல்லது சமைத்து உண்பார்கள். இன்று வருடம் முழுவதும் மரவள்ளி கிடைப்பதனால் வாரத்தில் இரண்டு தடவையாயினும் மரவள்ளி இல்லது உருளைக் கிழங்கு சமைத்துச் சாப்பிடுகினறனர். இவை இரண்டும் சீனி கூடிய கிழங்கு வகைகளாகும். இவற்றை உண்பதனாலும் நீரிழிவு நோய் அதிகரித்துக் காணப்படுகிறது.

இன்று சுகதேகியாக வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கான சந்தர்ப்பங்கள் பலவற்றை இழந்து 70 வீதத்துக்கு மேற்பட்டோர் நோயாளியாகவே வாழ்கின்றனர். தற்காலத்தில் பொதி செய்யப்பட்ட (Junk Foods) உனவுகள், துரித ஊணவுகள் (Fast Foods) எனத் தினமும் கடைகளில் கொள்வனவு செய்து உண்டு வருவதனால் பலரும் நோயாளியாகி இருக்கின்றனர். கோயிலில்களில் வழங்கப்படும் அன்னதானம் தொடக்கம் வீட்டில் சமைக்கப்படும் உணவு வரை லஞ்ஸ் சீற், சொப்பிங் பைகளிலேயே பொதி செய்கின்றனர். ஒரு சொப்பிங் பையின் உள்ளே ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட மைக்ரோ துகழ்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளன. இத்துகழ்கள் யாவும் நமது வயிற்றுக்குள்ளே செல்கின்றன.

ஆகவே நம் முன்னோர் வாழ்ந்த வாழ்க்கையைப் பின்பற்றி வாழ்வாங்கு வாழ்ந்தால் சுகமாக வாழலாம். இல்லையெனில் நமது அழிவினை யாராலும் தடுக்க முடியாது என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும் 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதை உணர்ந்து வாழ்வோமாக.

*மகிழ்ச்சியான வாழ்க்கை வாழத் தவறி*
*மகிழ்ச்சியை இழந்து தவிக்கும் – நீ*
*இழந்த வாழ்வுதனை ஒருகணம் திரும்பிப்பார்..*

**திரும்பிப்பார் தொடரும்....**

# கல்முனை மாநகர சபையில் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட முகப்பு அலுவலகம் ஊழல், மோசடிகளுக்கு இனி இடமில்லை என்கிறார் ஆணையாளர்

**(ஏ.எஸ்.மௌலானா)**

கல்முனை மாநகர சபையின் சேவைகளை மக்கள் இலகுவாக பெற்றுக் கொள்வதற்கும் வரிகள் மற்றும் சேவைக் கட்டணங்களை அசௌகரியம் எதுவுமின்றி இலகுவாகவும் விரைவாகவும் செலுத்துவதற்குமான வசதிகள் கொண்டதாக டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட முகப்பு அலுவலகம் (Front Office) ஒன்று அமைக்கப்பட்டு வருவதாக கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த காலங்களில் மக்கள் செலுத்திய வரிப்பணங்கள் மற்றும் சேவைக் கட்டணங்கள் சிலரால் கையாடல் செய்யப்பட்ட துரதிஷ்டமான சம்பவங்களையடுத்து மக்கள் மத்தியில் எழுந்திருக்கின்ற நம்பிக்கையீனம் களையப்பட்டு, இக்கொடுப்பனவுகள் ஒழுங்கு முறையாக அறவீடு செய்யப்பட்டு, முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும் என்பதுடன் அவற்றைக் கொண்டு மக்களுக்கு வினைத்திறன் மிக்க சேவைகள் வழங்கவதற்கும் தற்போதைய மாநகர சபை நிர்வாகம் திடசங்கற்பம் பூண்டிருக்கிறது

கல்முனை மாநகர சபையில் இவ்வாறான முகப்பு அலுவலக முறைமை செயற்படுத்தப்படாமையே கடந்த காலங்களில் நிதி மோசடிகளும் முறைகேடுகளும் இடம்பெறுவதற்கு காரணமாக அமைந்திருந்தது.

இக்குறைபாட்டை நிவர்த்தி செய்து, வரி அறவீடுகளை ஒழுங்கு முறைப்படுத்துவதை இலக்காகக் கொண்டே எமது மாநகர சபையிலும் முகப்பு அலுவலகத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.



இதுவொரு புதிய விடயம் அல்ல என்கிற போதிலும் எமது மாநகரசபைக்கு இதுவொரு புத்தாக்க முயற்சியாகும்.

பொது மக்கள் நலன் கருதி, உள்ளூராட்சி மன்றங்களில் காரியாலய வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண சபையின் வழிகாட்டலில் முகப்பு அலுவலக முறைமை அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கமைவாகவே கல்முனை மாநகர சபையிலும் முகப்பு அலுவலகம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதற்கென விஷேட செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது. அரச அங்கீகாரம் பெற்ற வயம்ப அபிவிருத்தி அதிகார சபை எனும் நிறுவனம் இச்செயலியை வடிவமைத்துள்ளது.

வங்கி முறைமையை ஒத்ததாக இச்சேவை அமையப்பெறவுள்ளது. வங்கி அட்டை மூலமும் ஒன்லைன் மூலமாக வீட்டில் இருந்தவாறும் மக்கள் தமது கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான வசதிகளைக் கொண்டதாக இது வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

தனிப்பட்ட முறையில் எவரும் நிதிக்கையாடலில் ஈடுபட முடியாதவாறு மிக நம்பகமானதும் பாதுகாப்பு மிக்கதாகவும் இச்செயலி அமையப்பெற்றிருக்கிறது.

இதன் மூலம் மக்கள் தமது வரிகளையும் சேவைக்கட்டணங்களையும் நேரடியாகவும் ஒன்லைன் மூலமாகவும் எவ்வித ஐயமுமின்றி மிக இலகுவாகவும் விரைவாகவும் செலுத்திக் கொள்ள முடியும். இதற்கு எமது மாநகர சபை நிர்வாகம் மிகவும் பொறுப்புடமையுடன் உத்தரவாதமளிக்கிறது.

மேலும், மாநகர சபையில் அமைக்கப்படுகின்ற முகப்பு அலுவலகம் மூலம் மாநகர சபையின் சேவைகள் வினைத்திறன் மிக்கதாக முன்கொண்டு செல்லப்படவுள்ளன. இம்முகப்பு அலுவலகத்தில் மக்கள் குறைகேள் பிரிவும் செயற்படவுள்ளது. மாநகரசபையின் எந்தவொரு சேவை தொடர்பிலும், குறிப்பாக தெரு விளக்கு பராமரிப்பு, திண்மக் கழிவகற்றல், வடிகான் பராமரிப்பு உள்ளிட்ட சேவைகள் தொடர்பிலான முறைப்பாடுகளை பதிவு செய்வதற்கும் அவற்றை நிவர்த்தி செய்து கொடுப்பதற்குமான கருமபீடங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன.

அத்துடன் மக்கள் தமது முறைப்பாடுகளை வீட்டில் இருந்தவாறு மேற்கொள்வதற்கும் தீர்வுகளை அறிந்து கொள்வதற்குமான 'மங்கிவ்வா' எனும் செயலி (Software) ஒன்றையும் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

கல்முனை மாநகர சபையில் மிக விரைவில் முகப்பு அலுவலகம் செயற்படத் தொடங்கியதும் கல்முனை மாநகர மக்கள் அதன் பயன்களை அனுபவிக்க முடியும் என்ற மகிழ்ச்சியான செய்தியை பெருமையுடன் அறியத் தருகின்றோம்- என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

# UNP இன் மக்கள் பணிமனை திறப்பு





**(எம்.ஐ.எம்.றியாஸ்)**

ஐக்கிய தேசியக் கட்சியின் பொத்துவில் தொகுதிக்கான மக்கள் பணிமனை கடந்த ஞாயிற்றுக்கிழமை (06) மாலை அட்டாளைச்சேனை பிரதான வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொத்துவில் தொகுதிக்கான அமைப்பாளர் யூ.கே.ஆதம்லெப்பை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மக்கள் பணிமனையினை திறந்து வைத்தார்.

இதன் பின்னர் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, முன்னாள் அமைச்சர் தயா கமகே, முன்னாள் பிரதி அமைச்சர் அனோமா கமகே, கல்முனை தொகுதிக்கான அதிகாரமளிக்கப்பட்ட முகவரும், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான ஏ.எம்.ஜெமீல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் .

இந்நிகழ்வில் பொத்துவில் தொகுதி செயற்பாட்டாளர்கள் தெரிவு செய்யப்பட்டு பொதுச்செயலாளரினால் அறிவிக்கப்பட்டு சபையில் மக்கள் அங்கீகாரம் பெறப்பட்டது.

கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, முன்னாள் அமைச்சர் தயா கமகே, முன்னாள் பிரதி அமைச்சர் அனோமா கமகே ஆகியோர்களது கட்சிப் பணிகளைப் பாராட்டி ஐக்கிய தேசியக் கட்சியின் பொத்துவில் தொகுதிக்கான அமைப்பாளர் யூ.கே.ஆதம்லெப்பையினால் பொன்னாடை போர்த்தியும் நினைவுச் சின்னங்கள் வழங்கியும் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளூர் வளங்களைக் கோண்டு தங்குதிறனுள்ள உற்பத்திகளை ஊக்குவிக்கும் முகமாக தோழிற்துறை சார்ந்த அனுபவப் பரிமாற்று





உள்ளூரில் கிடைக்கக் கூடிய இயற்கை வளங்களைக் கொண்டு நீண்ட காலம் நிலைத்து நிற்கக் கூடிய தொழிற்துறைகளை மேற்கொள்ளும் முகமாக கைத்தொழில் துறை சார்ந்தோருக்கிடையில் அனுபவப் பகிர்வை மேற்கொண்டு வருவதாக இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் இணைப்பாளர் தங்கராஜா திலீப்குமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களில் கைத்தொழில் துறையில் ஈடுபடும் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு வடபகுதியில் உள்ளூர் வளங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் நானாவித உற்பத்திப் பொருட்களையும் கைத்தொழில்துறை சார்ந்த நுணுக்கங்களையும் அறிந்து கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட வடபகுதிக்கான அனுபவக் கற்கை கள விஜயம் வார இறுதியில் (06,07) இடம்பெற்றது. கூட்டுறவு உற்பத்திச் சங்கங்களின் உற்பத்தியாளர்களினால் மேற்கொள்ளப்படும் விவசாய உணவு உற்பத்திகள், ஏனைய பாவினைப் பொருட்கள், ஆயர்வேத மருந்துப் பொருட்கள் இன்னும் துறைசார்ந்த உற்பத்திப் பொருட்கள் இக்கள விஜயத்தின்போது பார்வையிடப்பட்டன. கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த அனுபவக் கற்கை கள விஜயத்தின்போது மட்டக்களப்பு திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட இளைஞர் யுவதிகள் பெண்கள் மற்றும் நலிவடைந்த ஓரங்கட்டபடலுக்கு உள்ளான கைத்தொழில் துறை உற்பத்தியாளர்கள் சுமார் 60 பேர் கள விஜயத்தின்போது கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

வீ எபெக்ற் நிறுவனத்தின் நிதி அனுசரணையோடு இடம்பெறும் நலிவடைந்த சமூக பொருளாதார அபிவிருத்தி மேம்பாட்டுத் திட்டம் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தினால் அமுலாக்கப்பட்டு வருகின்றது.

# கங்குவேலி ஆதிசிவன் ஆலயத்தில் ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம்!

## அகத்தியமாமுனிவர் தீர்த்தமாடிய மகாவலி கங்கையில் தீர்த்தம்!!





**( வி.ரி.சகாதேவராஜா)**

அகத்திய மாமுனிவர் வாழ்ந்த வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருகோணமலை மூதூர் கங்குவேலி திருக்கரசையம்பதி ஆதிசிவன் தேவஸ்தானத்தின் வருடாந்த ஆடி அமாவாசை தீர்த்த உற்சவம் எதிர்வரும் 16 ஆம் தேதி புதன்கிழமை நடைபெற உள்ளது.

ஆடி அமாவாசை தீர்த்தோற்சவத்தின் தத்துவத்தை உணர்த்துகின்ற நிகழ்வான எள்ளுநீர் இறைத்து பிதிர்க்கடன் நிறைவேற்றுவதற்கு சிறப்பு வாய்ந்த இடமாக கருதப்படுகின்ற அகஸ்திய மாமுனிவர் தீர்த்தமாடிய புனித மகாவலி கங்கை கரையில் (வவுணாவில்) தீர்த்தமாட விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முதல் நாள் 15ஆம்திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஆதிசிவன் ஆலயத்தில் இருந்து சிவபிரான் மகாவலி கங்கையை அடைவார்கள்.

அன்று இரவு மகாவலி கங்கைக்கரையில் அகத்தியர் ஸ்தாபன வரலாறு கூறும் திருக்கரசைப்புராணம் படித்து பயன் சொல்கின்ற நிகழ்வும் ஆன்மீக சொற்பொழிவும் இடம்பெறும்.

மறுநாள் 16ஆம் தேதி புதன்கிழமை காலை புனித தீமிதிப்பு வைபவமும் சுன்னம் இடித்து ஆடி அமாவாசை தீர்த்த உற்சவம் இடம் பெறும். தொடர்ந்து அன்னதானம் இடம்பெறும் .

அன்றைய தினம் இரண்டு மணியளவில் தீர்த்த கரையிலிருந்து எழுந்தருளி மீண்டும் அகஸ்தியர் பிரதி செய்து வழிபட்ட அற்புதங்கள் நிறைந்த சிவலிங்க பெருமானை மூலமூர்த்தியாக கொண்ட சிவ ஆலயத்தை சென்றடைவர்.

சகல கிரியைகளும் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஜெயகிருஸ்ண சதீஷ் சர்மா தலைமையிலான சிவாச்சாரியார்களுடன் நடைபெற சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன என்று ஆலய பரிபாலன சபை தலைவர் ஓய்வுநிலைஅதிபர் வேலுப்பிள்ளை தவராசா தெரிவித்தார்.

# குரூரமான திராய்க்கேணி படுகோலைக்கு நீதியும் நிவாரணமும் கிடைக்க வேண்டும்!

## 33 வது படுகொலை நினைவேந்தலில் கோரிக்கை

**( வி.ரி.சகாதேவராஜா)**

கடந்த 33 வருடங்களுக்கு முன்பு ஏதுமறியாத 54 அப்பாவித் தமிழ் மக்கள் வெட்டியும் கொத்தியும் கொடூரமாக குரூரமாக கொலை செய்யப்பட்டார்கள். இதுவரை அப்படுகொலைக்கு நீதியான விசாரணையோ எந்த நிவாரணமோ கிடைக்கவில்லை. அதனை இந்த அரசாங்கம் பெற்றுத்தர வேண்டும்.

இவ்வாறு திராய்க்கேணி படுகொலையின் 33ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வு (6) ஞாயிற்றுக்கிழமை மாலை இடம் பெற்ற போது கலந்து கொண்ட இலங்கை தமிழரசுக் கட்சியின் பிரமுகர்கள் கோரிக்கை விடுத்தனர்.

திராய்க்கேணி படுகொலையின் 33 வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு (6) ஞாயிற்றுக்கிழமை மாலை சமூக செயற்பாட்டாளர் துரையப்பா காத்தவராயன்( காந்தன்) தலைமையில் திராய்க்கேணி சித்திவிநாயகர் ஆலய முன்றலில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்டபாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் பேசுகையில்.

திராய்க்கேணி தமிழ் மக்கள் இன்னும் பல சவால்களுக்கும் நெருங்குவாரங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு 33 வருடங்களுக்கு முன்பு இழைக்கப்பட்ட உலகறிந்த அநீதிக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை. நிவாரணம் கிடைக்கவில்லை. நாங்கள் தொடர்ச்சியாக குரல் கொடுத்து வருகின்றோம் .ஆனால் இன்னும் நில ஆக்கிரமிப்பும் அவர்களது இருப்பை இல்லாமல் செய்யும் வேலைகளும் தொடர்கின்றன .

தமிழ் மக்களை இறைவன் தான் காப்பாற்ற வேண்டும் என்று எமது தலைவர் கூறியது போன்று அந்த துர்பாக்கிய நிலைக்கு இந்த மக்கள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள் .

ஏதோ பூர்வீக நிலத்தையாவது தக்க வைக்க வேண்டும் என்பதற்காக அந்த மக்கள் இன்று நடைப்பிணமாக வாழ்ந்து வருகிறார்கள். எது வந்தாலும் என்ன சவால்கள் இருந்தாலும் நாங்கள் இந்த நினைவு கூரலை தொடர்ச்சியாக நடத்துவோம் . என்றார்.

அங்கு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் பேசுகையில்..

எதுவும் அறியாத அப்பாவி தமிழ் மக்களை 33 வருடங்களுக்கு முன்பு காட்டுமிராண்டித்தனமான சஹ்ரானை போன்ற ஒருசில முஸ்லிம் காடையர்கள் அரச படையுடன் சேர்ந்து இந்த இனப்படுகொலையை நடத்தினர் .

அந்த நிலத்தை அபகரிக்க வேண்டும் என்ற ஒரே நோக்குடன் இந்த படுகொலைகள் நிகழ்த்தப்பட்டு இருக்கின்றன.

தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் இந்த மக்களின் வாழ்வாதாரத்துக்கோ எதுவுமே செய்யாமல் புறக்கணித்து வந்திருக்கின்றன.

அதனால் அவர்கள் இன்றும் பலமின்றி அடிமையாக வாழ்ந்து வருகிறார்கள் .

எனவே இந்த இனப்படுகொலைக்கு நீதியான விசாரணை வேண்டும். அவர்களுக்கு நீதி நிவாரணம் கிடைக்க வேண்டும் .

இங்கு இடம் பெற்ற குரூரமான இப்படியான படுகொலைகள் இனியும் நடந்து விடக்கூடாது என்பதற்காக தனது அப்பா பாட்டன் பாட்டி பூட்டி ஆகியோர் எவ்வாறு கொலை செய்யப்பட்டார்கள் என்பதனை இன்றைய இளம் சமுதாயமும் அறிய வேண்டும் என்பதற்காக இதனை நாங்கள் செய்கின்றோம். என்றார்.

சமூக செயற்பாட்டாளர் தா. பிரதீபன் உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள்.

33 வருடங்களுக்கு முன்பு காட்டுமிராண்டித்தனமாக படுகொலை செய்யப்பட்ட மக்களின் உறவுகள் கதறியழுது கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.

# பள்ளிக்கூடங்கள் கட்டடக் கூடுகள் அல்ல:

# தீபச்செல்வனின் நூலுக்கு நடிகர் நாசர் அணிந்துரை!

ஈழத்து எழுத்தாளர் தீபச்செல்வனின் ʼபள்ளிக்கூடங்கள் கட்டடக் கூடுகள் அல்லʼ நூல் முல்லைத்தீவு பாடசாலைகளுக்கு யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் வழங்கப்பட்டுள்ளது. இந்த நூல் முல்லைப் பாடசாலைகளுக்கு டாக்டர் விக்கினேஸ்வரா நினைவாக நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டது.

போர் கடுமையாக இடம்பெற்ற காலத்தில் கூட வடக்கு கிழக்கின் கல்வி வீதம் கொழும்புக்கு சவால் விடுமளவுக்கு உச்சத்தில் இருந்தது. ஆனால் இன்று கடைநிலையில் 24 ஆக முல்லையும் 25 ஆக கிளிநொச்சியும் ஆகியுள்ளது.

வன்னியில் குழந்தைகள் மீண்டும் ஒரு முறை கல்விப்புரட்சி நிகழ்த்த ‘பள்ளிக்கூடங்கள் வெறும் கட்டடக்கூடுகள் அல்ல’ கல்வி சார் விழிப்புணர்வு நூல் வழங்கப்பட்டது.


ஈழத்து எழுத்தாளர் தீபச்செல்வன் எழுதிய இந்த நூலை டாக்டர் பரமநாதன் விக்கினேஸ்வரா முதலாம் ஆண்டு நினைவாக ஜீவநதி பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

முல்லைதீவு மாவட்டத்தின் மல்லாவி, பாலிநகர் மற்றும் கோட்டைகட்டியகுளம் பிரதேசத்திலிருந்து யாழ்பல்கலைக்கழகம் சென்ற வ.கலையரசி, கி.அலெக்ஷன், சி.கருணிகா, யோ.துசாந்தன், ப.கயல்விழி, அ. ராதிகா, ச.சாலினி ஆகிய மாணவ மாணவிகளால் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

மல்லாவி மத்திய கல்லாரி தேசிய பாடசாலை, துணுக்காய் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை, உயிலங்குளம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை, ஐயன்கன்குளம் மகாவித்தியாலயம், பாலிநகர் மகாவித்தியாலயம். முதலிய பாடசாலைகளுக்கு பள்ளிக்கூடங்களது முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு நூல் வழங்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் இடையில் விழிப்புணர்வுக் கலந்துரையாடல்களும் மேலும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பாடசாலை அதிபர்,ஆசிரியர் குழாமிற்கும் இடையில் பாடசாலைகளது தேவை, கல்வி வளர்ச்சிக்கான பாதைகள் பற்றிய கலந்துரையாடல்களும் இடம்பெற்றது.

### டாக்டர் விக்கினேஸ்வரா முதல் ஆண்டு நினைவாக :




ஈழத்தின் இன்றைய முக்கிய இலக்கிய ஆளுமைகளில் தமிழ்த் தேசியத்திலும், தாய் மண்ணிலும் தீராப் பற்றுள்ள கவிஞர். தீபச்செல்வன் எழுதிய பள்ளிக்கூடங்கள் கட்டடக்கூடுகள் அல்ல எனும் கட்டுரைத் தொகுப்பு டாக்டர் பரமநாதன் விக்கினேஸ்வரா அவர்களின் முதல் ஆண்டு நினைவாக இந்நூல் வெளியிடப்பட்டது.

முதன் முதலில் ஈழத்தில் பதிப்பிக்கப்படும் நூல் என்ற வகையில் இந்த அறிவிப்பை வெளியிடுவதில் பெரு மகிழ்வு கொள்கிறேன் என்றும்,

இந்த நூலிற்கு நடிகரும், அன்பிற்குரிய நாசர் அவர்கள் சிறந்த அணிந்துரை வழங்கியிருப்பது கூடுதல் மகிழ்வான செய்தியாகும் என கவிஞர் தீபச்செல்வன் தெரிவித்துள்ளார்.

### நடிகர் நாசரின் அணிந்துரை:

கவிதை, கட்டுரைகள், கதைகளால் மட்டுமல்ல, தம்பி தீபச்செல்வனை பழகியும் பேசியும் பயணித்தும் அறிவேன். உன்னால் உலோக் குண்டுகளால் எம் மக்களை சுட்டு சாகடிக்க முடியுமானால், நான் என் சொற்குண்டுகளால் நீ மறைத்த ரகசியங்களை பொய்களை சுட்டு சிதறிடிப்பேன் என எழுத்தே ஆயுதமாய், நடுகல் பதித்த வெளியிலே, பயங்கரவாதியாய் தீர்க்கமாய் திரிபவன் தீபச்செல்வன்.

இதோ இன்று, பள்ளிக்கூடங்கள், கட்டடக் கூடுகள் அல்ல என்ற தலைப்பில் கட்டுரைத் தொகுப்பு ஒன்றை டாக்டர் பரமநாதன் விக்



கினேஸ்வரா ஐயாவின் முதலாம் ஆண்டு நினைவாக அர்ப்பணிக்கிறார். நடந்தாலோ, நீந்தினாலோ, நான்கு மணிக்கு உள்ளாக அடைந்துவிட முடியும் என்கின்ற பிறகே அடைந்துவிட முடியும் என்கின்ற தேசத்தில் நடந்த அவலம் என் கண்ணில் தெளிவாய் தெரியாமற் போனதென்ன?

வான் கீழிடை எழுந்த ஓலங்கள், என் செவி சேராததென்ன? எங்களூர் ஊடகங்களும் அரசியல்வாதிகளும் நேர்த்தியாய் தேர்ந்தெழுடுத்தும் கவனமாய் ஒதுக்கித் தள்ளியும் நிகழ்வுகளை மிகைப்படுத்தியும் ரசனை ஊட்டியும் திரித்தும் மறைத்துமாய் தங்களுக்கு ஆதாயப்படும் வகையில் எங்கள் மனதுக்கு கொண்டு சேர்த்தனர்.

நாங்களும் எங்கள் கற்பனை வரலாற்றின் வழி ஆளுக் கொன்றாகத் திரித்து பகிர்ந்து கொண்டோம். ஒன்று அதீத உணர்ச்சிவசப் பட்டோம். அல்லது தூர நின்று வேடிக்கை பார்த்தோம். எதிர்பார்ப்பின்றி, ஆதாயமற்று, ஒரு எழுத்தாளன், தன் ஐம்புலனும் அனுபவித்ததை தேர்ந்தெடுத்த சொற்களால் செறற் தொடர்களால் புதினங்கள் உருவாகும் போதுதான் கலங்கித் தணிந்த நீரின் படிகத் தெளிவுபோல அகக் கண்ணுக்குப் புலப்படுகிறது. ஐயோவெனக் கதறத் தோன்றுகிறது.

ஒரு சமூகத்தை அழித்தொழிக்க வேண்டுமென்றால் அதின் அறிவுத் தொப்புள் கொடியை அறுங்கள், அடிமரத்தை அல்ல, ஆனிவேரை பிடிங்கிப் பொசுக்கு என்ற தத்துவார்த்திற்கு சான்றுதான் யாழ் நூலக எரிப்பு. பள்ளிகள் பதுங்குகுழிகள் ஆனதும் பறிக்கப்பட்டு இராணுவ முகாங்களானதும் அதன் பாற்பட்டவையே.

பள்ளிக்காக கட்டப்பட்டும் கட்டடங்கள் செங்கல்லால், சுண்ணாம்பால் ஆனதல்ல. கூட்டுக் கருவறைகள். எதிர்காலத்திற்கான திண்மையான தண்மையான சிசுக்களை தாங்கி வளர்க்கும் ஞானக் கூடுகள்.

இப் புத்தகத்தின் ஒரு பகுதியில் அந்த ஞானக் கூட்டுக்குள் பாடி ஆடி, கற்பனை செய்து, கதைகள் புனைந்து, பாட்டெழுதி நாடகம் ஆடி, விளையாட்டும் கனவும் கற்றுலுமாய் கடக்க வேண்டிய வயதினை ஒரு சிறுமி பிறசர் கிளினிக் சென்று கழிக்க வேண்டிய அவலம் என்ன என்பதை காரணம் என்ன என்பதை பதிவு செய்துள்ளார் தீபச்செல்வன்.

அதுபோலவே, ஆதாரத்துடன் பல பக்கங்கள் பின்னிருக்கும் அரசியலை அதிகார வர்க்கத்தின் ஆட்டக்கலையை புரிய வைத்து எதிர்கால காலத்திற்கான தயாராகுதலுக்கான உந்தித் தள்ளுகிறது இப் புத்தகம். இந்தப் புத்தகத்தை சமூகத்திற்கு அர்ப்பணித்த தம்பி தீபச்செல்வனுக்கு நன்றியும் கைசேர்ப்பும் என நடிகர் நாசரின் அணிந்துரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.







